මගේ අංකය:- DGHS/COVID 19/347/2020(III)
සෞඛ්‍ය සේවා අධ්‍යක්ෂ ජනරාල් කාර්යාලය
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
''සුවසිරිපාය''
කොළඹ 10
2020.11./03

සියලුම සෞඛ්‍ය ආයතන ප්‍රධානින් වෙත,

**COVID 19 රෝගය පැතිර කාලය තුල දී රජයේ රෝහල් වලින් සායනික රෝගීන් සඳහා ඖෂධ සැපයීම.**

COVID 19 රෝගය පැතිර යාම හේතුවෙන් දිවයින පුරා රෝහල් සායන පැවැත්වීමට අපහසුතා පැන නැඟී ඇත. එබැවින් එම කාලය තුල ඔබගේ රෝහලේ මාසික සායනයෙන්, ප්‍රතිකාර ලබන රෝගින්ට ඖෂධ ලබා දීම සඳහා වැඩ සටහනක් සෞඛ්‍ය අමාත්‍යාංශය හා තැපැල් දෙපාර්තුමේනතුව ඒකාබද්ධව ක්‍රියාත්මක කිරිමට රජය විසින් තීරණය කර ඇත. හෙට සිට **(2020.11.05)** දිවයින පුරා ඇති රෝහල වලින් ප්‍රතිකාර ලබාගන්නා රෝගීන්ගේ ඖෂධ නිවෙස් වෙත ලබා දීම ආරම්භ කෙරේ.

එබැවින් රෝහල සමීපයේ ඇති තැපැල් කාර්යාලයේ ප්‍රධානියා සමඟ සාකච්ඡා කර එම වැඩ පිළිවෙල සාර්ථක කර ගැනිම සඳහා පහත පියවරයන් අනුගමනය කරන ලෙස සියලුම සෞඛ්‍ය ආයතන ප්‍රධානීන් වෙත දන්වා සිටිමි.

1. මසකට/මාස දෙකකට ප්‍රමාණවත් ඖෂධ නොමැති, ඔබ රෝහල් සායනයේ ලියාපදිංචි, මාසිකව/ මාස දෙකකට බෙහෙත් ගන්නා, දූරකථනය මඟින් තහවුරු කර ගන්නා ලද සායනික රෝගීන්ගේ නිවස වෙත මසකට/මාස දෙකකට ප්‍රමාණවත් බෙහෙත් ලබා දීමට රෝහල සමීපයේ ඇති තැපැල් කාර්යාලයේ ප්‍රධාන නිලධාරි සමග කටයුතු කරන්න.
2. සායන පොත වෛද්‍යවරයා විසින් පරීක්ෂා කර, ඖෂධ වට්ටෝරුව නියම කල පසුව, අදාල කාර්ය මණ්ඩලය විසින් අදාළ බෙහෙත් පැකැට්ටු සකස් කරන්න. රෝගියාට අදාල නිවැරදි ඖෂධ නියමිත මාත්‍රාවෙන් ලබා දීම සඳහා දෙවරක් පරීක්ෂා කර බලන්න. කිසිම විටක රෝගියා පරීක්ෂා නොකොට රෝගීන්ගේ බෙහෙත් වට්ටෝරුව වෙනස් නොකරන ලෙස අවධාරණය කරන්න.
3. බෙහෙත් පැකැට්ටුවේ පිටත සායන අංකය, රෝගියාගේ නම, ලිපිනය සහ දූරකථන අංකය සමඟ ආයතනයේ නම පැහැදිලිව සඳහන් කරන්න. රෝගියාට යම් විමසීමක් කල යුතු නම් එය ඉටු කර ගැනීම පිණිස ඔබගේ ඖෂධ සංයොජක / ඖෂධවේදී ගේ දූරකථන අංකය ද පැකට්ටුවේ සඳහන් කරන්න.
4. බාරදිය නොහැකි නම් නැවත රෝහලට එවන ලෙසද තැපැල් කාර්යාලයේ ප්‍රධාන නිලධාරියාට දන්වන්න. ඒ සඳහා රෝහලේ නම ද සඳහන් කරන්න.
5. ඖෂධ පැකැට්ටුවේ ඇති පරිදි නම සහ සායන අංකය සඳහන් නාම ලේඛණ දෙකක් සකස් කර එම පැකට්ටු සමඟ, තැපැල් කාර්යාලය වෙත යවන්න. තැපැල් කාර්යාලය භාර ගත් බවට අත්සන තැබීමෙන් පසු එක් පිටපතක් ඔබ කාර්යාලයේද අනෙක් පිටපත තැපැල් කාර්යාලයටද ලබා දෙන්න.

6. ඇතැම් ඖෂධ හිරු එළියට හා තාපයට සංවේදී වන බැවින් ඖෂධ ප්‍රමිතිය ආරක්ෂා වන පරිදි අසුරණ සකස් කර ගැනීමට පියවර ගන්න.

7. අවශ්‍ය පරිදි මුඛ ආවරණ, අත් ආවරණ සහ අත් පිරිසිදු කිරීමේ දියර තැපැල් කාර්ය මණ්ඩලය වෙත ලබාදීමට කටයුතු කරන්න.

8. මෙම ක්‍රමවේදය ක්‍රියාත්මක කරන කාලය තුල තුල ඖෂධගාරයෙන් නිකුත් කරන ඖෂධ සඳහා තොග වශයෙන් ගනන් තැබීමේ ක්‍රමය අනුගමනය කිරිමට උපදෙස් දෙන්න.(Bulk accounting method)

9. අධික සායනික රෝගීන් ප්‍රමාණයක් සිටින රෝහල් සඳහා ඖෂධ පැකට් සකසන කාර්යය මණ්ඩල පැය 24 පුරා සේවයේ යොදවා ගැනීමට අවශ්‍ය වන්නේ නම්,සේවා අවශ්‍යතාවය අනුව කාර්යය මණ්ඩල සේවයේ යොදවා ගැනීමේ බලය ආයතන ප්‍රධානියා වෙත පැවරෙනු ඇත.

10. ඖෂධ සුරක්ෂිතව ඇසුරුම් කිරිම සඳහා ප්‍රමාණවත් සුදුසු ඇසුරුම් ලබා දිමට කටයුතු කරන්න.

11. යම් රෝගියෙකු බෙහෙත් ලබා ගන්නේ වෙනත් දුර බැහැර පිහිටි රෝහලකින් නම්, ලගම ඇති රෝහලට රෝගියා ලග ඇති සායනික පොත යවා ආයතනික ප්‍රධානියා වෙත යොමු කරන්න. එවිට එම ආයතන ප්‍රධානියා විසින් රෝගියා බෙහෙත් ගන්නා ස්ථිර අදාල රෝහල වෙත දුරකථන ඇමතුමක් ලබා දී විමසා බලා තහවුරු කරගෙන ඖෂධ ලබා දීමට කටයුතු කරන්න.

12. ප්‍රදේශයේ පවුල් සෞඛ්‍ය නිළධාරීන්, මහජන සෞඛ්‍ය පරික්ෂක සහ ග්‍රාම නිළධාරීන් වෙත ඔබගේ රෝහලේ දුරකථන අංකය ලබා දී, සායනික රෝගීන් වෙත එම අංකය දැනුම් දෙන ලෙස දන්වා සිටිම මඟින්, ඖෂධ ලබා ගැනීමට අවශ්‍ය වන රෝගීන්ගේ නිවරදි තොරතුරු ඔබ රෝහලට ලබා ගත හැකි වනු ඇත.

13. සියළුම පලාත් සෞඛ්‍ය හා ප්‍රාදේශීය සෞඛ්‍ය සේවා අධ්‍යක්ෂකවරුන් සහ රෝහල් ප්‍රධානීන් මෙම ක්‍රියාවලිය නිරන්තර අධීක්ෂණය කර ඵලදායි ලෙස ක්‍රමවත් වැඩසටහනක් ක්‍රියාත්මක කිරිමට වග බලා ගත යුතුය. එකතුකර ගන්නා රෝගීන් ගේ නවතම තොරතුරු නිසි පරිදි ලේඛනගතකර තබා ගන්න.

මෙම අවධානම් අවස්ථාවේ දී, රෝගි ජනතාව, රෝහල තුල එක් රැස් වීම අවම කර ගනිමින් රෝගීන්ට සිදුවන අපහසුතා වැලැක්වීම සඳහා රජය විසින් යොජනා කරන ලද මෙම ඒකාබද්ධ වැඩසටහන සාර්ථක කර ගැනිම සඳහා ඔබ සියලු දෙනා දක්වන සහයෝගය ඉතා අගය කොට සලකමි.

වෛද්‍ය අසේල ගුණවර්ධන
සෞඛ්‍ය සේවා අධ්‍යක්ෂ ජනරාල්

වෛද්‍ය අසේල ගුණවර්ධන
සෞඛ්‍ය සේවා අධ්‍යක්ෂ ජනරාල්
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
"සුවසිරිපාය"
385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත,
කොළඹ 10.

පිටපත් :-

01) ලේකම්, සෞඛ්‍ය අමාත්‍යාංශය
02) තැපැල්පති තුමා
03) සියලුම පලාත් සෞඛ්‍ය සේවා අධ්‍යක්ෂකවරුන්
04) සියලුම ප්‍රාදේශිය සෞඛ්‍ය සේවා අධ්‍යක්ෂකවරුන්

எனது இலக்கம்: - DGHS/COVID 19/347/2020(III)
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயத்தின் அலுவலகம்
சுகாதார அமைச்சு
“சுவசிரிபாய”
கொழும்பு-10
220.03.29

அனைத்து நிறுவனத் தலைவர்களுக்கும்,

<u>அரச வைத்தியசாலைகளின் ஆய்சாலைகளில் பதிவுசெய்யப்பட்ட நோயாளர்களுக்கான மருந்துகளை கொரனா திடீர் பரவலின்போது (Outbreak) வினியோகம் செய்தல்.</u>

கொரனா வைரசின் திடீர் பரவல் காரணமாக தற்போது நோயாளர்களது தமது மருந்துகளைக் கிரமமாகப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் சுகாதார அமைச்சும் அஞ்சல் திணைக்களமும் இணைந்து காவல்துறைத் திணைக்களத்தின் உதவியுடன் அரச வைத்தியசாலைகளில் பதிவுசெய்துள்ள நோயாளர்களுக்கான மருந்து வகைகளை அவர்களது வீட்டிற்கே கொண்டு சென்று வழங்கும் வேலைத்திட்;டத்தினை முன்னெடுத்துள்ளன. இந்த நடவடிக்கையானது நாடளாவியரீதியில் 05.11.2020 இல் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

நீங்கள் அருகில் உள்ள தபால் நிலைய அதிபருடன் தொடர்புகொண்டு, கீழ்க்காணும் வழிகாட்டல்களுக்கு அமைய ஆவன செய்யும்படி வேண்டப்படுகிறீர்கள்.

1. பொறுப்பு வைத்திய அதிகாரிகள் இந்த நடவடிக்கை இடம்பெறும் காலப்பகுதி அனைத்திலும் உங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகத்தின் பொறுப்பதிகாரியுடன் கூட்டிணைந்து செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். உங்களது வைத்தியசாலை ஆய்சாலையில் பதிவு செய்திருக்கும் நோயாளர்களுக்குரிய ஒருமாதம் அல்லது இரண்டு மாதங்களுக்குத் தேவையான மருந்துகள் அவர்களது வீடுகளுக்கு வினியோகிக்கப்பட வேண்டும். அவ்வாறு வினியோகப்பதற்கு முன்னர் தொலைபேசி வழியாகத் தொடர்பு கொண்டு உறுதிப்படுதிக்கொள்வதால் இதில் ஏற்படக்கூடிய தவறுகளைக் குறைக்கலாம்.

2. சரியான நோயாளிக்கு சரியான மருந்துகள் சரியான பிரமாணங்களின் படி அனுப்பப்படுவதை நிறுவனத் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். உரியமுறையில் தெரியப்படுத்தாமலும் நோயாளியை நேரில் பார்வையிடாமலும் மருந்துகளை மாற்றி வழங்கக் கூடாது என்பதைத் தயவுடன் கவனத்தில் கொள்க.

3. சரியான பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், சாய்சாலை எண் மற்றும் வைத்தியசாலையின் பெயர் ஆகியன மருந்துப் பொதியின் மேல் ஒட்டப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். வைத்தியசாலையின்

பொறுப்புவாய்ந்த உத்தியோத்தரது (மருந்தாளர் அல்லது மருந்துக் கலவையாளரது) அலைபேசி இலக்கத்தினை அப்பொதியில் குறிப்பிடுவது மேலதிக விளங்கங்களை நோயாளர்கள் தொடர்பு கொண்டு பெறுவதற்கு உதவியாக அமையும் ஆதலினால் அவ்வாறு செய்தல் உசிதமானது.

4. நோயாளரிடம் சேர்ப்பிக்கப்படாத மருந்துப் பொதிகளை திரும்பவும் வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு தபால் அதிபருக்கு அறிவிக்கவும்.

5. வைத்தியசாலை நிர்வாகத்தினால் சகல நோயாளர்களினதும் பெயர் , தொடர்பு விபரங்கள் மற்றும் ஆய்சாலை எண் உட்பட்ட அனைத்து விபரங்களும் அடங்கிய பதிவேட்டினை இரு பிரதிகளுடன் தயாரித்தல் வேண்டும். ஒன்று வைத்தியசாலையிலும் மற்றது தபாலகத்திலும் பேணப்படல் வேண்டும்.

   தபாலகத்திற்குரிய பிரதியானது மருந்துப் பொதிகளுடன் சேர்த்து தபாலதிபரிடம் கையளிக்கப்பட வேண்டும். இப்பிரதியானது நோயளர்களுக்கு மருந்தினை வினியோகிக்கும்போது தபாலதிபரால் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

   மற்றைய பிரதியானது தபாலகத்தில் மருந்துகளைக் கையளிக்கும்போது சான்றுப்படுத்தியபின்னர் வைத்தியசாலையில் பேணப்பட வேண்டும். இந்த நடைமுறையின் இறுதியில் இப் பதிவேட்டின் பூரணப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று வைத்தியசாலையிலும் மற்றையது தபாலகத்திலும் பேணப்படும்;. தயவுசெய்து சரியான முறையில் அலுவலர்களுடன் தொடர்பாடல்களை மேற்கொண்டு மருந்துகளின் குளிர்சங்கிலியை பேணிக்கொள்ள வேண்டும்.

6. சில மருந்துகள் சூரிய ஒளிக்கும் வெப்பத்துக்கும் உணர்திறன் கொண்டவையாதலால் அம் மருந்துகளது தரம் பேணப்படும் வகையில் பொதி செய்யப்படுதலை உறுதி செய்ய வேண்டும்.

7. அஞ்சல் திணைக்கள பணியாளர்களுக்கு தேவையான மருத்துவ முகக் கவசங்கள், கையுறைகள் மற்றும் கைகழுவும் தொற்றுநீக்கித் திரங்கள் ஆகியவை வழங்கப்படுவதை நீங்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

8. இக்காலப் பகுதியில் மட்டும் மொத்தமாக மருந்துகளை கணக்கீடு செய்யும் முறையினைப் பயன்படுத்தி மருந்துக் கையிருப்பினை சமன் செய்வதற்கு அனுமதிக்கவும்.

9. இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தேவையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பில் நிறுவனத் தலைவர்களே முடிவெடுக்கலாம் என்பதுடன், தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் இவர்களது சேவையினைச் சாதாரண கடமை நேரத்திற்கு அப்பாலோ அல்லது இருபத்துநான்கு மணிநேரமுமோ பெற்றுக் கொள்ளலாம்.

10. அனைத்து நிறுவனத் தலைவர்களும் மருந்துகளைப் பொதி செய்வதற்குத் அவசியமான பொருட்களை தேவையான அளவில் இருப்பு வைத்துக்கொள்வதை உறுதிப்படுத்தவேண்டும்.

11. நோயாளி பதிவு செய்துள்ள வைத்தியசாலை தொலைவில் இருப்பின், அவ்வாறான நோயாளர்களுக்கான மருந்துகளை அவர்களது வதிவிடத்திற்கு அருகில் உள்ள வைத்தியசாலையானது நோயாளி சமர்ப்பிக்கும் ஆய்சாலைப் புத்தகத்தின் அடிப்படையில் வழங்கமுடியும். இவ்வாறு வழங்கப்படுவதை நோயாளி பதிவு செய்துள்ள வைத்தியசாலைக்கு தற்போது மருந்தினை வழங்கும் ( நோயாளியின் வதிவிடத்திற்கு அண்மையில் உள்ள ) வைத்தியசாலையானது அறியத்தரவேண்டும்.

12. நோயாளர்களுக்கு வைத்தியசாலையின் தொலைபேசி இலக்கத்தினை பொதுச் சுகாதார மருத்துவ மாது , பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் கிராம அலுவலர் ஆகியோர் ஊடாக வழங்கி அதனூடாக நோயாளரிடமிருந்து வைத்தியசாலையானது துல்லியமான தரவுகளைத் திரட்ட முடியும்.

13. இந்தப் பொறிமுறையானது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதனை சகல மகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், மத்திய சுகாதார அமைச்சின் கீழ்வரும் வைத்தியசாலைகளது பொறுப்பாளர்கள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் ஆகியோர் உறுதிப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த நெருக்கடியான சூழ்நிலையில் இப் பணியினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக நீங்கள் காட்டும் ஒத்துழைப்பினையும் உதவியினையும் நான் மெச்சுகிறேன்.

வைத்தியர் அசேல குணவர்த்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

**பிரதிகள்**: செயலாளர்- சுகாதார அமைச்சு- தகவலுக்காக
சகல மாகாண/ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்- உரிய நடவடிக்கைக்காக
அஞ்சல் மாஅதிபர்- தகவலுக்காக

My Number: - DGHS/COVID 19/347/2020(III)
Office of the Director General of Health services
Ministry of Health
"Suwasiripaya"
Colombo – 10
2020.11. 03

All heads of the Institutions

**Supply of Pharmaceuticals for Clinic Patients during COVID – 19 Outbreak period**

Due to ongoing COVID-19 outbreak situation in the country patients are facing difficulties in obtaining their routine medicine. Therefore, Ministry of Health and Postal Department together have organized a programme to deliver the medicines to their doorstep. This process is going to be commenced island wide from tomorrow (05.11.2020).

You are informed to communicate with the postmaster of nearest the post office and do the needful adhering to following instructions.

1. Heads of Institutions are requested to coordinate with Head of nearest post office throughout the process. Drugs which are sufficient for one month/Two Months should be delivered to the address of the patients who have been registered at your hospital. Calling and verifying the address prior to delivery will minimize the errors.
2. Head of Institutions shall ensure the correct drug in correct dose is being delivered to the correct patient. Please note not to change medicine without examine the patient and without proper communication.
3. Name, clinic number, address and contact number of the patient should be clearly written in the pack. Name of the hospital, mobile number of a responsible person (Pharmacist/Dispenser of the hospital) should be mentioned to inquire any clarification.
4. Inform postmaster to return the undelivered parcels to the relevant hospital
5. The hospital authority should prepare a register with two copies, including the details of all parcels and should handover to the post master along with drug package (should include name, clinic number and contact details of all the patients)
   One copy can be kept with hospital after certifying the receiving of the drug package by the post office. Second copy to be completed by the post master while delivering

the drug packages to patients. Ultimately both hospital and post office can keep copies of the completed sheet at the end of the procedure.
Please ensure maintaining cold chain appropriately having proper communication with officers.

6. There are some drugs which are heat and light sensitive. Therefore, you are requested to pack those in a way to maintain the quality of drugs.

7. You must ensure supply of medical masks, gloves, and hand sanitizers to the postal staff.

8. Allow to maintain bulk accounting method for drug balancing only during this period.

9. Heads of the intuitions can decide required number staff and get their service beyond the normal duty hours or round the clock if necessary.

10. All heads of the institution should ensure availability of adequate amount of suitable packing material

11. If the registered hospital is distant from patient's current residence, the nearest hospital authority can arrange supplying medicine for such patients after communicating with former hospital. Patient should submit their clinic copy to initiate this process.

12. If hospital authority does not have accurate information of patients, those can be collected by communicating the hospital contact number to the patients through PHM, PHI and GS.

13. All the Provincial Directors, Regional Directors of Health Services and Heads of Line Ministry Institutions are requested to ensure successful implementation of this process.

I appreciate your kind cooperation and assistance for the success of this process at this critical situation.

Dr. ASELA GUNAWARDENA
Director General of Health Services
Ministry of Health
"Suwasiripaya"
385 Rev. Baddegama Wimalawansa Thero Mw.
Colombo 10.

Dr Asela Gunawardana
Director General of Health Services

Copies:-
1) Secretary of Health – for Information
2) All Provincial/ Regional Directors – for necessary action
3) Postmaster general – for Information